ஒன்றரை இலட்சமாகச் சில கட்டுப்பாடுகளுடன் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்குப்பிறகு ரூபாய் ஒன்றரை இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அரசால் ஆண்டு தோறும் வழங்கப்படும் இந்தப் பராமரிப்புத் தொகையால் ஈடுகட்ட முடியவில்லை என்று இந்நிறுவனத்தின் நிர்வாகிகள் முறையீடு செய்திருக்கிறார்கள். ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற பராமரிப்புத் தொகையை இரண்டு இலட்சத்திலிருந்து நான்கு இலட்சமாக வழங்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

D. Pharmacy Course

*Q.No. 120 : Thiru M. AMBIGAPATHY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether seats in D. Pharmacy are reserved for the children of medical shop owners in the State who have an Association; and

(b) if so, the number of seats reserved in the State?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ;

(அ) ஆம். மருந்தாக்கியல் பட்டயப் படிப்பில் 20 இடங்கள் மருந்து விற்பனையாளர்களின் பிள்ளைகளுக்காக ஒதுக்கப்படுகின்றன.

திரு. மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்படுகின்ற இடங்கள் அவர்களுடைய பிள்ளைகளுக்கு முறையாகக் கிடைக்கிறதா? அப்படி கிடைக்கவில்லையென்றால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்) மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்டவர்களுக்குத்தான் கிடைக்கின்றது என்று இருந்து வருகிறது. அப்படிக் கிடைக்கவில்லை என்று குறிப்பாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரியப்படுத்தினால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

நாகை அரசினர் தலைமை மருத்துவமனைக்கு ஜெனரேட்டர்

*குறுகிய கால வினா எண். 3 திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகை பொது மருத்துவமனையில் வெள்ளம், புயல் காலங்களில் மின்சாரப் பாதிப்பை ஈடுசெய்ய ஜெனரேட்டர் பொருத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது பொருத்தப்படும்?